விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை பழைய பேருந்து நிலைய பகுதியில் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் அமைக்கப்பட்டிருந்த கலைஞர் நூலகத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தனுஷ் குமார், துணை அமைப்பாளர்கள் தங்கம், ரவிக்கண்ணன் பாபுஜி, பாசறை ஆனந்த், கார்த்தி, நகர் மன்ற தலைவர் சுந்தர் லட்சுமி சிவப்பிரகாசம், நகர செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றிய செயலாளர் பாலகணேசன், பொன்ராஜ், மாநில நெசவாளர் அணி பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர் .

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 19/11/2024 அன்று தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் *சிறுபான்மை ஆணையத் தலைவர் அருட்தந்தை சோ.ஜோ. அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித் உறுப்பினர் செயலாளர் ஏ.சம்பத் மற்றும் சிறுபான்மை ஆணைய உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

அனைத்து அரசு பள்ளிகளிலும்

‘மகிழ் முற்றம்’ மாணவர்குழு அமைப்பு!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, நவ. 22 -

சென்னை, சூளைமேடு, ஜெய் கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , மகிழ் முற்றம் கையேடு மற்றும் லோகோ ஆகியவற்றை வெளியிட்டார் . அதனை பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திருமதி.சோ.மதுமதி, பெற்றுக்கொண்டார். இவ்விழாவிற்கு ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, பள்ளிக் கல்வித் துறை சார்பாக 2024-2025 ஆம் நிதி யாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து, மாணவத் தலைவர் மற்றும் மாணவ அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர். இதன் மூலம் மாணவர்களிடையே அரசியல் அறிவு சார்ந்த அனுபவங்கள் மற்றும் ஆளுமைத் திறன் மேம்பட, மாதிரி சட்டமன்றம் மற்றும் மாதிரி பாராளுமன்றம் நடத்தப்படும். இதற்காக, தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டம் ரூபாய்.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்”.

மேற்கண்ட அறிவிப்பின்படி, 2024 25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் “மகிழ் முற்றம்” மாணவர் குழு (House System) அமைப்பினை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாணவர்கள் குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாக கொண்டுள்ளது. பல்வேறு கல்வி மற்றும் கல்விசார் இணைச் செயல்பாடுகள் மூலம் சமூக உணர்வை ஊக்குவிப்பதற்கும், குழுப் பணியை வளர்ப்பதற்கும், மாணவர் தலைமை பண்பை ஊக்குவிப்பதற்கும் ஏதுவாக வருகை, கற்றல் திறன். மன்றங்கள் மற்றும் கலைத்திருவிழாவில் மாணவர்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி அளவில் இரு தனிச் செயல்பாடுகளை ஆசிரியர்கள் தேர்வு செய்து மதிப்பீடு செய்யலாம். எடுத்து காட்டாக நேரம் தவறாமை, காலை வழிபாட்டு கூட்டத்தில் பங்கேற்றல், வீட்டு ப்பாடம் முடித்தல், தன்சுத்தம் பேனுதல் போன்ற செயல்பாடுகளை தெரிவு செய்யலாம். இதன் மூலம் இக்குழு அமைப்பு மாணவர்களிடையே விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான தளமாக அமையும்.

மகிழ் முற்றம் திட்டச் செயலாக்கத்திற்கென கையேடு பள்ளிக் கல்வித் துறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கையேட்டில், வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி 37,592 அரசுப் பள்ளிகளில் குழுக்கள் அமைக்கப்படும். உலக குழந்தைகள் தினமான நவம்பர் 20 அன்று மாணவர்களுக்கான வளமான கல்வியை வழங்குவதற்கான ஒரு மைல் கல்லாக இத்திட்டம் செயல் படுத்தப்படும். இன்று மகிழ் முற்றம் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

இவ்விழாவில் பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர்.ச.கண்ணப்பன், இணை இயக்குநர்கள் திருமதி.சசிகலா, வை.குமார், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். அ.புகழேந்தி, மாமன்ற உறுப்பினர், திருமதி. எலிசபெத் பாபு, ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, நவ. 22 -

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை துவங்கியதிலிருந்து பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவத்தில் இதுவரை சராசரி மழையளவை விட 6 விழுக்காடு அதிக மழைப்பொழிவை தமிழ்நாடு பெற்றுள்ளது. கடந்த 2 நாட்களாக இராமநாதபுரம், நாகப்பட்டினம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கனமழை பெய்து வருகின்றது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் வட்டாரங்களில் கனமழை பெய்து வருகிறது. இராமேஸ்வரத்தில் 43.8 செ.மீட்டரும், தங்கச்சிமடத்தில் 33.8 செ.மீட்டரும், பாம்பன் பகுதியில் 28 செ.மீட்டரும், மண்டபம் பகுதியில் 27 செ.மீட்டரும் பதிவாகியுள்ளது.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரையின் பேரில் கனமழையினை எதிர்கொள்ள சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் 80 ஜே.சி.பிக்களும், 47 மோட்டார் பம்புகளும், 111 படகுகளும், 63 மரம் அறுப்பான்களும் மாவட்ட நிருவாகத்தால் கண்டறியப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 125 ஜே.சி.பிக்களும், 75 படகுகளும், 250 ஜெனரேட்டர்களும், 281 மரம் அறுப்பான்களும் மாவட்ட நிருவாகத்தால் கண்டறி யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 64 பகுதிகளில் மழைநீர் தேங்கியிருந்த நிலையில், 34 பகுதிகளில் மழைநீர் வெளியேற்றப்பட்டு எஞ்சியுள்ள பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மழைநீரை வெளியேற்ற 27 ஜே.சி.பிக்களும், 42 மோட்டார் பம்புகளும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கனமழையின் காரணமாக பாம்பன் மற்றும் மண்டபம் பகுதிகளில் மொத்தம் 4 நிவாரண முகாம்களில் 190 நபர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. 11 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு இன்று 52 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 789 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்க இராமநாதபுரம் மாவட்டத் திற்கு கண்காணிப்பு அலுவலராக எம். வள்ளலார், விரைந்துள்ளார்.

இன்று (21.11.2024) நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் 20 செ.மீட்டர் அளவுக்கு மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கனமழையினை எதிர்கொண்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள போதுமான உபகரணங்கள் தயாராக உள்ளன. மேலும், மண்டல அளவிலான மீட்பு மற்றும் நிவாரண குழுக்கள் அமைக்கப்பட்டு நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், இந்திய பெருங்கடல் மற்றும் அதனை அடுத்துள்ள தெற்கு அந்தமான் கடல் பகுதியில் ஒரு மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது என்றும், இதன் காரணமாக தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் 23.11.2024 அன்று ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது என்றும், இது அடுத்த 2 நாட்களில் தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, 25.11.2024 முதல் 27.11.2024 வரை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

இதனை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்களும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்களும் தயார் நிலையில் உள்ளன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வின் போது, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வெ.மோகனச்சந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

கோவை மாநகர் மாவட்டத்தில் மருத்துவ முகாம்கள் - நல உதவிகள்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் - மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

கோவை, நவ.22-

கோவை மாநகர் மாவட்ட செயற்குழு கூட்டம், நேற்று (21-11-2024, வியாழக்கிழமை) காலை வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. அது வருமாறு:-

இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட இயக்கத்தின் வழித் தோன்றல், திராவிட சூரியன்,

ஒற்றை செங்கல் புரட்சியின் வெற்றி நாயகன், மக்கள் நலனை என்றும் இதயத்தில் சுமந்திருப்பவர்,

நமது கழகம் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ள வரை தழைத்தோங்கி வளரும், உயரும், தமிழ்மக்களின் நலனுக்காக என்றும் உழைக்கும் எனும் நம்பிக்கை ஒளிக்கீற்றை கையில் ஏந்தி வரும் அயராத உழைப்பின் அடையாளம், மக்கள் நலனை என்றும் இதயத்தில் சுமந்திருக்கும், தி.மு.க கழகத்தின் தொண்டன், கழக இளைஞரணிச் செயலாளர், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என ஓங்கி உயர்ந்து கழகத்தின் காவல் அரணாக காட்சியளிக்கும் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நவம்பர் 27 அன்று 47-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அவர்களின் தலைமையில், கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட 16 பகுதி, 54 வட்ட கழகங்கள் மற்றும் அனைத்து பூத்களிலும் கழக இரு வண்ணக்கொடி ஏற்றி, அனைத்து பகுதிகளிலும் ஏழை, எளியவர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மரக் கன்றுகளை நடுதல், மருத்துவ முகாம்கள், இரத்தான முகாம்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியருக்கு கல்வி உதவி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ். எம்.பி.முருகன், கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, LPF சு. பார்த்தசாரதி, தீர்மானக் குழு உறுப்பினர் மு.இரா. செல்வராஜ், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா.முருகவேல், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் எல்.பி.எஃப். தமிழ்ச் செல்வன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயகுமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், மு.மாச முருகன், வழக்கறிஞர் மகுடபதி, இரா.மணி கண்டன், ச.குப்புசாமி, ச. கார்த்திகேயன், சரஸ்வதி புஷ்பராஜ்,

பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.சாமி, மு. சிவா, ஷேக் அப்துல்லா, துரை.செந்தமிழ்ச்செல்வன், மா.நாகராஜ், இரா. சேரலாதன், வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே.பாக்கியராஜ், எ.எம்.கிருஷ்ணராஜு, கே.எம்.ரவி, கோவை லோகு, அஞ்சுகம் பழனியப்பன், ஆர்.எம்.சேதுராமன், ப.பசுபதி, மார்க்கெட் எம். மனோகரன், வி.ஐ.பதுருதீன்,

அணிகளின் அமைப்பாளர்கள் இளைஞரணி தனபால், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு இலா. தேவசீலன், நெசவாளர் அணி வி.மணி, தொழிலாளர் அணி கே.ஆர்.ராஜா, மீனவர் அணி கண்ணன், அயலக அணி தி.கண்ணன், சுற்றுச்சூழல் அணி சத்யா கோவை தங்கம், தொண்டர்அணி அர்ஜுனன், மாணவர் அணி சிவப்பிரகாஷ், பொறியாளர் அணி நா.பாபு, ஆதிதிராவிடர் நலக் குழு டெம்போசிவா, வர்த்தகர் அணி தலைவர் தென்னவன் சுப்பிரமணியம், விளையாட்டு மேம்பாட்டு அணி சஞ்சய், வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட ஐந்தாவது மண்டலத்தில் உள்ள 70வது வார்டில் குளம் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., நேரில் ஆய்வு செய்தார். உடன் மண்டல குழு தலைவர் எஸ் இந்திரன் பகுதி கழக செயலாளர் ஆ.நடராஜன் மற்றும் மோகன், லோகு, தேனுபுரி அரசு அதிகாரிகள் உடன் இருந்தார்கள்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம்!

சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிவிப்பு !

சென்னை, நவ. 22 -

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து அச்சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடனும், தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளோடு கடந்த 35 ஆண்டு காலமாக மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக களப் பணிகளோடு தி.மு.கழகப் பணிகளையும் மாற்றுத்திறனாளிகளிடையே செவ்வனே செய்து வருகிறோம் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில் நாளை (23.11.2024 - சனிக்கிழமை) மாலை 4.30 மணி அளவில் சென்னை, தி.நகர், தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலகத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சங்க பொதுச் செயலாளர் பா. சந்தானகிருஷ்ணன், மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கே.இளங்கோவன் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்திற்கு வருகை தரும் அனைவரையும் பேராசிரியர் பொன். கதிரேசன், ஆசிரியர் ரஹமதுல்லா வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகளான நெல்லை ரமேஷ், வேளச்சேரி கி. பத்மநாபன், ஆர். சீனிவாசன், பட்டுக்கோட்டை வீர.சரவணன், வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், சைமன், ஹரி கணேஷ், பெரியசாமி, வடசென்னை சித்தார்த்தன், எம்.பெருமாள், ஹ.சரஸ்வதி, ஜெயபாரதி, சுந்தரதேவன், விவேக், ரவி, பவானி, மீனா, ஜெரினா, பச்சையம்மாள் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: துணை முதலமைச்சர், மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை யொட்டி விழாக்கள் எடுப்பதும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பாக.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில்

சாலையோர வியாபாரிகள் விற்பனையை ஒழுங்குபடுத்த நடவடிக்கை!

சென்னை, நவ. 22 -

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் விற்பனையை ஒழுங்குமுறைப்படுத்துதல், சட்டம் மற்றும் விதிகளை பின்பற்றி நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

நகர விற்பனைக் குழுவின் 06.11.2024 அன்று நடைபெற்ற 8வது கூட்டத்தில் மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட 35,588 சாலையோர வியாபாரிகளின் விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்காக Chip பொருத்திய QR Code மற்றும் இணைய இணைப்பு (We blink) பயன்பாட்டுடன் கூடிய புதிய அடையாள அட்டை வழங்குவதற்காக 22.11.2024 முதல் 30.11.2024 வரை அனைத்து மண்டல அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

மேற்கண்ட சிறப்பு முகாம்களில் மாநகராட்சியால் வழங்கப்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை, ஆதார் அட்டை மற்றும் கைபேசியினை கொண்டு வர வேண்டும். கைபேசி எண்ணிற்கு OTP அனுப்பப்படும். அந்த கைபேசி எண் மாநகராட்சி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, பழைய அடையாள அட்டையை பெற்றுக்கொண்டு புதிய அடையாள அட்டை வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு–ஷெனாய் நகர் சுப்பராயன் தெருவில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது மண்டல மருத்துவ அலுவலர், உதவிப் பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.